# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 18/2016** **நாள் : 19/09/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

**19.09.2016(இன்று) வாரியக்குழுவுடன் ஊதிய உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்றது.** நமது தரப்பில் தோழர்கள் எஸ்.எஸ்.சுப்பிரமணியன்/தலைவர், எஸ்.ராஜேந்திரன்/ பொதுச்செயலாளர், எம்.வெங்கடேசன்/பொருளாளர், கே.அருள்செல்வன், ஈ.அந்தோணி, கே.ரவிச்சந்திரன், டி.ஜெயசங்கர், எம். தனலட்சுமி, டி.அறிவழகன், ஏ.பழனி, ஆர்.ரவிக்குமார் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பேச்சுவார்த்தையில் நமது தரப்பில்**

- களப்பிரிவில் உள்ள தேக்க நிலையை அகற்றிடவும், அதுவரை கம்பியாளரிலிருந்து மின்பாதை ஆய்வாளர் பதவிக்கு பல ஆண்டுகள் காத்திருக்கும் கம்பியாளர்களின் உள்ளக்குமுறலை கணக்கிலெடுத்து மிகை மின்பாதை ஆய்வாளர் பதவி வழங்கிட வேண்டும். மேலும் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க விரைவில் ஒப்பந்தம் காண வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
- வேலைப்பளு இல்லாத ஊதிய உயர்வாக இருக்க வேண்டும்
- 09.01.2014 முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2015-2016 -ல் உயர்ந்த மின் இணைப்புகளுக்கு ஏற்ப பதவிகள் அனுமதிக்கப்பட்டு நிரப்பிட வேண்டும்.
- களப்பிரிவிலும் கணக்கீட்டு பிரிவிலும் வேலைப்பளுவை உயர்த்தக்கூடாது.
- சம்பள உயர்வு 40 % இருக்க வேண்டும்.
- குறைந்தபட்ச பணப்பயன் ரூ.5000/- ஆக இருக்க வேண்டும்.
- பஞ்சப்படி 01.12.2015-ல் உள்ள 119 % இணைக்க வேண்டும்.

- சர்வீஸ் வெயிட்டேஜ் வழங்க வேண்டும்

- அனைத்து அலவன்ஸ்களும் உயர்த்தப்பட வேண்டும்

- வீட்டு வாடகைப்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்குவதை போல வழங்கப்பட வேண்டும்.

- 7வது ஊதிய உயர்வு சிபாரிசு அப்படியே பொருத்த வேண்டிய அவசியமில்லை சில அடிப்படை வழிகாட்டுதலை எடுத்துக் கொள்ளலாம்.

- மின்துறைக்கு தனியான காப்பீடு திட்டம் உருவாக்கப்பட வேண்டும்

- வட்டம் விட்டு, வட்டம் மாறினாலும், களப்பிரிவு பணியாளர்களுக்கு, தேர்வு நிலையை கணக்கில் எடுக்க வேண்டும்.

- காலிப்பணியிடங்களை கணக்கிலெடுத்து ஒப்பந்த ஊழியரை அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்த வேண்டும். தொழில்நுட்பம் பயின்றவர்களை கொண்டு நிரப்பிட வேண்டும்.

- நெல்லை, திருவண்ணாமலை வட்டங்கள் பரப்பளவில் மிகப்பெரியதாக இருப்பதால், நிர்வாக வசதியை கணக்கில் கொண்டு பிரிக்கப்பட வேண்டும்.

- சேலம் வட்டத்தில் 31 கேபிள் இணைப்பாளர்கள் பதவிகளை அனுமதிக்க வேண்டும்.

- 933 கணக்கீட்டாளர்களுக்கு, கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கு தேவையற்ற காலதாமதம் செய்து வருவதை சுட்டி காட்டியுள்ளோம்.

- பகுதி நேர பணியாளர்கள் நிரந்தரம், புதிய பதவிகளுக்கு அனுமதி தொடர்பாகவும் எடுத்துக் கூறினோம்.

நமது கோரிக்கைகள் மற்றும் ஊதிய உயர்வு தொடர்பாக எழுத்து பூர்வமாக பின்னர் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் **27.09.2016** அன்று நடைபெற உள்ள **நிர்வாகிகள் கூட்டத்திற்கு** பின்பு ஊதிய உயர்வு பட்டியல் தயாரிக்க ஆலோசனைக்குழு அமைக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.ராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்